தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி– 620002

# புனித வின்சென்ட் பல்லோட்டியின் ஆலயம் சிறப்புகள்

**வி.மோனிகா யாழினி,**
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி (தன்னாட்சி),
பசுமலை, மதுரை –4.
மின்னஞ்சல்: monicayazhini89@gmail.com

## முன்னுரை

இறைக்கொடையை உய்த்து உணர்ந்தவர்கள் புன்தர்கள் புதுமைகளை புரிவதால் மட்டும் புனிதர்களாக ஆவது இல்லை. இறை இயேசுவின் திரு சிலுவைதனைதங்கள் வாழ்வின் உன்னத கருவிகளாக கொண்டு உலகினை ஆன்மீக வழியில் இயக்கியவர்கள். வாழ்நாள் எல்லாம் இறைத் தேடலில் முழ்கியவர்கள். ஏழை, எளிய, ஆதறவற்றவர்கள். புறகண்க்கப்பட்ட மக்களிடம் இறைவனைக் கண்டவர்கள். அவர்களை இறைவன் பால் ஈர்த்தவர்கள். நம் புனித வின்செென்ட் பல்லோட்டி ஓர் உன்னத திருத்தூதர். ஒவ்வொருவரின் உள்மதில் ஊடுருவியவர். மகா மனிதர், ஓர் உன்னத புனிதர். பொதுநிலையினரை ஊக்கப்படுத்தி திருச்சபையில் அவர்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்த பொதுநிலையினரின் அப்போஸ்தலர்.

## பல்லோட்டியின் பிறப்பு

வின்சென்ட் பல்லோட்டி 1795 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21 ஆம் நாள் பீட்டர் பால் பல்லோட்டி – மரிய மகதலோனா தெ ரோசி என்னும் ஆழ்ந்த இறைப்பற்றுள்ள கத்தோலிக்க பெற்றோருக்கு மூன்றாவது குழந்தையாக பிறந்தார். தந்தை பீட்டர் பால் பெரும் செல்வந்தராய் இல்லாத பொதிலும், பீட்டர் பால் தம் குடும்பத்தினை எவ்வித கஷ்டமும் இன்றி அவரிகளின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்கு இறைவன் தனக்கு அளித்த கொடைகளுக்கும், செல்வத்திற்கும் நன்றியோடு வாழ்ந்தவர் புனித வின்சென்ட் பல்லோட்டியின் தந்தை பல பிறர் நல சேவை

அமைப்புகளில் பணியாளராகவும் மற்றும் உபகாரியாகவும் இருந்தவர் நம் புனித வின்சென்ட் பல்லோட்டி. வாழ்வில் தாராளமாக, ஏராளமாக காணப்பட்ட அன்பு, இரக்கம், பக்தி போன்ற குணநலன்கள் அனைத்திற்கும் அவரின் தந்தையின் வாழ்க்கைளில் கண்கூடாகக் கண்ட உயர் பண்புகள் தான் காரமென்றால், அது மிகையாகாது.பீட்டர்பால் பல்லோட்டி தினமும் அதிகாலையில் எழுந்து அருகிலிருந்த டெல் சப்ராகியோ ஆலயத்தில் திருப்பலியில் பங்கெடுத்து நற்கருணை பெறுவதில் மிகவும் ஆர்வம் கொண்டவராக இருந்தார். அந்த ஆர்வம் அவரின் வாழ்நாள் அறுதி வரையிலும் நீடித்தது.

பீட்டர் பால் பல்லோட்டி தான் வளர்ந்த விதத்திலேயே தன் குழந்தைகளை பக்தியிலும், இறை மனத அன்பிலும் வளர்க்க அக்கறையும் ஆர்வமும் கொண்டிருந்தார். தன் பிள்ளைகளைப் பேணி வளர்ப்பதை எந்த நிலையிலும் விட்டுக்கொடுக்காதவர். வீட்டிலேயே தினமும் தன் குழந்தைகளுக்கும் ஞானக் கல்வியையும் கற்றுக் கொடுத்தார். தன்னோடு தன் பிள்ளைகளைத் திருப்பலிக்கு மற்ற ஆன்ம காரியங்களுக்கும் உரோமைநகர் பல ஆலயங்களுக்கும் அழைத்துச் செல்வதை வழக்கமாக கொண்டிருந்தார்.

பல்லோட்டி தனது ஆறாவது வயதில் 1801 – ஆம் ஆண்டு ஜீலை 10- ஆம் நாள் உறுதிப்பூசுதல் என்னும் அருளடையாளத்தைப் பெற்றார். குழந்தைப் பருவத்திலே மிகவும் பக்திமிக்க ஆர்வமுள்ள பீடச்சிறுவனாக இருந்தார். தன் சகோதரர்களோடு சேர்ந்து திருப்பலி நிறைவேற்றுவதே பல்லோட்டியின் அன்றாட விளையாட்டாக இருந்தது என்று இவரின் தந்தையின் குறிப்பிலிருந்து தெரிகிறது.

பல்லோட்டியின் கல்வி நிலை

1814 ஆம் ஆண்டு சபியான்ஸா பல்கலைக்கழகத்தில் தன் உயர்கல்வியைத் முடித்தார். அதே பல்கலைக்கழகத்தில் பல்லோட்டி தத்துவவியல், இறையியல், கல்வியியல் போன்றவற்றில் உயர்படிப்பைத் தொடர்ந்தார். 1814- 1817 -ல் முனைவர் பட்டம் பெற்றர்.

குருத்துவத்தில் ஆர்வம்

பல்லோட்டி, தான் ஒரு குருவானவராக வேண்டுமென்னும் தீராத தாகத்தினால் இறைவன் பால் முழுமையாக ஈர்க்கப்பட்டார். தன் சிறுவயது முதல் தன் தாயோடுதினமும் திருப்பலிக்கு செல்லுதல், முடிந்த மட்டும் அத்திருப்பலிகளில்

உதவுதலும் அவரின் இந்தக் குருத்துவ தாகத்திற்கு உரமிட்டன. தன் குருத்துவ பயிற்சியின் முதற்படியாக வின்சென்ட் பல்லோட்டி மோன்டே சித்தோரியா என்னம் மறைப்பரப்ப இல்லத்தில் சேர்ந்தார். இவரின் பணியும் ஆர்வமும் இச்சபையில் மற்ற உறுப்பினர்களுக்கு முன் மாதிரியாகவும், மிகப்பெரிய வழிகாட்டுதலாகவும் இருந்தது. இவர் பல்லோட்டி குருவாக திருநிலைப் படுத்தப்பட்ட போது அவரின் வயது 23 தான். திருநிலைப்படுத்தப்பட்ட அடுத்த நாளில் அவருக்கு பிடித்தமான,யேசு ஆலயத்தில் தன் முதல் திரப்பலியை நிறைவேற்றினார். குருவாக இருப்பது எத்தனை அழகு வாய்ந்தது, ஓ இறைவா ! என் இறைவா ! இரத்தக் கறையில்லாதபடி தியாகப்பலியையும், அருள் அடையாளங்களையும் வழங்கிட எத்துணை தகுதி பெற்றவன். பகழ்ச்சியின் பலியையும், நிறைவேற்றிடப் பேற்றவன் என்ற எல்லா குருக்களிடமும் தாழ்மையுடன் கேட்டுக் கொண்டதுடன், எல்லாச் செயல்களும் முழுமனத்தோடு ஈடுபாடு காட்டுங்கள் என்றும் கூறினார். இந்தத் தீராத தாகமும், அவரின் அயராத குருத்துவப்பணியும் அவரின் புனித பாதையின் ஒளி விளக்குகள் ஆகின.

புனிதர் பல்லோட்டி

தன்னுடைய 55 ஆவதுவயதினிலே, ரோம் நகரில் 1850 – ஆம் ஆண்டு சான் சால்வாத் தோரே என்னுமிடத்தில் ஜனவரி 22- ஆம் நாள் தம் ஆவியை இறைவன் கையில் ஒப்படைத்தார். அவரது உடல் சான் சால்வாத்தோரே ஆலயத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

1879 – ல் அவருடைய எல்லா புதகங்களும், கடிதங்களும் ஆய்வு செய்யப்பட்டு அவர் உண்மையிலேயே புனிதர் பட்டம் பெறத் தகுதியுடையவர் என்பது உறுதி செய்யப்பட்டது. 1887- ஆம் ஆண்டு பல்லோட்டி வணக்கத்திற்கு உரியவர் என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டார். 1949 -ஆம் ஆண்டு புனிதர்களை உயர்த்துகின்ற நடுவத்தின் பரிந்துரையின்படி, சான் சால்வாத்தோரே ஆலயத்தில் 100 ஆண்டுகளுக்கு முன்பாக அடக்கம் செய்யப்பட்ட உடலானது வெளியே எடுக்கப்பட்டது. உடல் சிறிதளவும் கெடாமல், அடகடகம் செய்யப்பட்ட நிலையிலேயே இருந்தது. இதைத் தொடர்ந்து பல்லோட்டி 1950 – ஆம் ஆண்டு ஜனவரி 22 ஆம் நாள் அருளாளர் என்ற புனதர் நிலையின் 2 – ம் நிலைக்கு உயர்த்தப்பட்டார்.

புனிதர் நிலைக்கு உயர்த்தக்கூடிய எல்லாத் தகுதிகளும் வின்சென்ட் பல்லோட்டிக்கு அருப்பதை ஏற்றுக் கொண்டு, திருச்சபை தன் நிலைப்பாட்டை திருத்தந்தைக்கு

கோரிக்கையாக அனுப்பியது. அவ்வமைப்பின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட திருத்தந்தை 23- ம் அருளப்பர், வின்செண்ட் பல்லோட்டியை 1963 – ஆம் ஆண்டு ஜனவரி 22 -ம் நாள் புனித பேதுரு பேராலயத்தில் நடந்த திருப்பலியில் புனிதர் எனப்பிரகடனம் செய்தார். 1963 ஆம் ஆண்டு ஏப்ரல் 6 – ஆம் நாள் மறைப்பரப்பு குருக்கள் கூட்டமைப்பின் பாதுகாவலர் என அறிவிக்கப்பட்டு பல்லோட்டியின் புனிதத்திற்கு மேலும் மெருகூட்டினார்.

பல்லோட்டி இறக்கும் போது, அவர் உருவாக்கிய துறவற சபையில் 7 நபர்கள் மட்டுமே இருந்தனர். அவர் விதைத்த இந்த விதை விருட்சம் கண்டு, இன்று உலகில் பரந்து விரிந்து ஒரு ஆலமரம் போல தன் விழுதுகளை உலகெங்கும் பரவி நிற்கிறது. அன்று சந்றேக் குறைய ஆறு கண்டங்களில் 45 நாடுனளில் 1750 – க்கும் மேற்பட்ட குருக்களும் 650 – க்கும் மேலான அருட்சகோதரிகளும் நற்செய்திபணியில் தம்மை இணைத்துக் கொண்டுள்ளனர்.

திருநகரில் பல்லோட்டி ஆலயம்

மதுரை மாவட்டத்தில் திருப்பரங்குன்றத்தை அடுத்துள்ள பகுதியான திருநகரில் எங்கள் பங்கின் முதல் அருட்தந்தை . மான்பிரட் ஹாக் அவர்களால் இப்பங்கானது நிறுவப்பட்டது. இவருக்கு பின் அருட்தந்தை. சூசையன் அவர்களால் ஆலயம் எழுப்பப்பட்டது. 1982 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 – ஆம் தேதி கட்டிமுடிக்கப்பட்டு அர்ச்சிக்கப்பட்டது. தற்போது 300 குடும்பங்கள் கொண்டு சிறப்பு பெற்று நிற்கிறது.

பங்கின் கிளை ஆலயங்கள்

புனித அந்தோனியார் ஆலயம் சீர்மிகு தோற்றத்துடன் சிறந்து வியங்கும் திருநகர் பங்கு உருவாவதற்கு முன்பே, உசிலம்பட்டி பங்கினை சார்நத தனக்கன்குளத்தில் யேசு சபை அருட்பாண்யாளர் மொந்தே அடிகளார் முயற்சியால் விண்ணக அரசியின் பெயரால் வழிபாட்டுத்தலம் அமைக்கப்பட்டு மறை போதைகள் நடந்தேறின. நூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த புனித தலமானது புனித அந்தோணியார் சிற்றாலயமாக விளங்கி வருகிறது.

புனித லூர்து அன்னை திருத்தலம் (கெபிக்கோவில்) திருவள்ளுவர் நகர், பர்மா, இலங்கை – தாயகம் திரும்பியோருக்காக 01-05-1983 அன்று பங்குத்தந்தை சூசையன் அவர்களின் முயற்சியால் ஒரு சிறிய கெபியாகத் துவங்கப்பட்டது. ஒவ்வொரு சனிக்கிழமையும் இங்கு திருப்பலி நடைபெறுகிறது.

புனித யூதா ததேயு திருத்தலம் பிற இனத்தவரின் அடைக்கலமாகவும், கைவிடப்பட்டோரின் பாதுவாவலராகயும் இருப்பவர் நம் புனிதர் ததேயு. தேசிய நெடுசாலையில் கவின்மிகு தோற்றத்துடன் கலை நுட்பத்தின் சங்கமமாக மின்னி துலங்கும் புனித யூதா ததேயு சிற்றாலயத்தை மிடுக்குடன் நிறுவியுள்ளது எங்கள் பல்லோட்டி சபை அருட்தந்தையர்கள்.

குழந்தை யேசு சிற்றாலயம் – திருப்பரங்குன்றம் புனித வின்செண்ட் பங்கின் பரந்த மனப்பான்மையால் திருநகரை சுற்றி வாழும் மக்களுக்காகவும், யேசுவின் அன்பை அறியாத மக்களுக்காகவும் அவரின் அன்பை சுவைப்பதற்காகவும் அனைவரின் ஒத்துழைப்பால் இவ்வாலயம் எழுப்பப்பட்டது.

பங்கு மற்றும் கிளை ஆலயங்களின் திருவிழா நாள்கள்

புனித வின்செண்ட் பல்லோட்டி திருநாள் – ஜனவரி 22

லூர்து அன்னை திருத்தலத் திருநாள் -பிப்ரவரி 14

புனித அந்தோணியார் ஆலயத் திருநாள் – ஜீன் 13

புனித யூதா ததேயு திருத்தலத் திருநாள் – அக்டோபர் 26

குழந்தை யேசுத் திருத்தலத் திருநாள் – ஜனவரி 30

சிறப்பு நிகழ்வாக மாதம் தோறும் முதல் வெள்ளி கிழமையன்று நற்கருணை ஆராதனை நடைப்பெற்று வருகிறது. மக்கள் அனைவரும் ஆராதனையில் கலந்து கொண்டு இறைவனின் அருளைபெற்று மகிழ்வுடன் வாழ்கிறார்கள்.